**MCOP NO: 4433/2025** **DATE: 11.08.2026**

ம.சா : 1

பெயர் : திரு.அப்பன்ராஜ்

த/பெ : திரு.கன்னியப்பன்

வயது : 48

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 11.08.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 15 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுவில் கூறியுள்ளபடியும், சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளபடியும் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இறந்து போன எனது மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு சான்று, காப்பீடு, மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை, தொலைபேசி மூலம் தகவல் தெரிந்து கொண்டேன். விபத்து சமயத்தில் இறந்து போன எனது மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மாநகர பேருந்து எதிரே வந்து மோதியதால் என் மகனிற்கு விபத்து ஏற்பட்டது. இறந்து போன எனது மகன் அஜாக்கிரதையாகவும், கவனகுறைவாகவும் வளைந்து நெளிந்து ஓட்டி சென்றதால் பேருந்தை முந்த முயற்சி செய்த போது தான் அவருக்கு இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் என் மகனை பெரியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேற்படி மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர்கள் என் மகன் வரும் வழியிலே இறந்து விட்டதாக சொன்னதால் என் மகனின் உடலை பிரேத பரிசோதனைக்காக கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். எனது மகன் விபத்து சமயத்தில் ஐடிஐ இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். படித்துக்கொண்டே வெல்டிங் வேலை பகுதி நேரமாக செய்து வந்தார். இறந்து போன எனது மகனின் தொழில் மற்றும் வருமானத்தை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். எனக்கு இறந்து போன மகனை தவிர மற்றொரு மகன் உள்ளார். அவர் 3ம் மனுதாரர் ஆவார். விபத்து சமயத்தில் இறந்து போன என் மகனிற்கு திருமணம் ஆகவில்லை. விபத்து என்னுடைய மகனின் கவனகுறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதால் மாநகர போக்குவரத்து கழகம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனை மாநகர போக்குவரத்து கழகம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.